**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.61/2022**
**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சக்திவேல்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **சங்கிலி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(24.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தூம்பக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது பக்கத்து வீட்டை சார்ந்தவர் ஆவார். ஏற்கனவே எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இருசக்கர வாகனம் எனது வயலில் சென்றதது சம்பந்தமாக பிரச்சினை இருந்தது. கடந்த 18.10.2021 அன்று இரவு 8 மணியளவில் எனது வீட்டில் நான் வேலைக்கு சென்றுவிட்டு இருந்த போது எதிரி மாயக்கண்ணன் எனது வீட்டிற்கு வந்து நான் எனது வீட்டிற்கு முன்பு நிறுத்தியிருந்த TVS XL ஐ கடப்பாறை கம்பியால் அடித்து சேதம் ஏற்படுத்தினார். அவர் அடித்ததில் எனது இருசக்கர வாகனத்தில் முன்புற முகப்பு விளக்கு மற்றும் கேண்பார் ஆகியவை சேதாரம் ஆகி இருந்தது. அதன் மதிப்பு அப்போதைக்கு ரூ.2000/- ஆகும். மீண்டும் வீட்டிற்குள் வந்து வீட்டின் கதவை அடித்து பூட்டை உடைத்துவிட்டார். நான் உட்கார்ந்து டி.வி பார்த்து கொண்டிருந்தேன். கடப்பாறை கம்பியால் என்னையும் எதிரி தாக்கவந்தார் நான் வலது கையால் தடுத்தேன். அதனால் எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது ( சாட்சி வலது கையில் உள்ள

முழங்கைக்கும் மணிக்கட்டுக்கும் இடையே உள்ள காயத்தை காண்பிக்கிறார்). சத்தம் கேட்டு ஓடிவந்த எனது மனைவி சண்டையை தடுக்க முயன்றார். லட்சுமணன் மற்றும் வேல்முருகன் ஆகியோர்களும் விலக்கிவிட்டு ஆஜர் எதிரியை கூட்டி சென்றார்கள். நான் கூடக்கோவில் காவல் நிலையம் சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அவர்கள் மருத்துவமனை செல்லுமாறு சொன்னதின் பேரில் நான் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்ந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ளை கையெழுத்தும் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தை போலிசார் எழுதினார்கள். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் மேற்படி மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி வயலும் எனது வயலும் அருகே உள்ளது என்றால் 1 கி.மீ உள்ளது. வயல் வரப்பானது ஒரு ஆள் மட்டும் தான் செல்லக்கூடியது என்றால் சரிதான். வயக்காட்டிற்கு இடையே தண்ணீர் போகக்கூடிய வசதிக்கு சிறு வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். ரோட்டில் இருந்து வயக்காடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 500 மீ இருக்கும். வயலில் பொதுவாக பயிர் செய்யும் போது எவ்வித இருசக்கர வாகனம் செல்லமுடியாது என்றால் சரிதான். எல்லோரும் ரோட்டில் தான் இருசக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு தான் செல்லமுடியும் என்றால் சரிதான். எல்லாரும் வயக்காட்டிற்கு நடந்து தான் செல்லமுடியும் என்றால் சரிதான். எதிரி வீடும் எனது வீடும் அருகருகே உள்ளது என்றால் இல்லை. தள்ளி உள்ளது. எனது இருசக்கர வாகனத்தை எனது வீட்டின் காலியிடத்தில் நிறுத்தியிருந்தேன் என்றால் சரிதான். மழைக்காலத்தில் இருசக்கர வாகனம் விழுவதற்கு வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. எதிரி தான் அடித்துக்கீழே தள்ளிவிட்டார். அப்போது நான் வீட்டிற்குள் உட்கார்ந்திருந்தேன். சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தேன். எதிரி உடைத்துக்கொண்டிருந்தார். நான் வயது முதிர்வின் காரணமாக கட்டிலில் இருந்து தடுமாறி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் வயக்காட்டில் நடப்பது

சம்பந்தமாக பிரச்சினை உள்ளது என்றாலும் அவர் மீது நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் குறிப்பிட்டு வாகனத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நான் சேதமதிப்பையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரிக்கும் போது அதில் நான் கையெழுத்தும் மட்டும் போட்டேனா என்றால் நான் சொல்ல சொல்ல எழுதி கையெழுத்து வாங்கினார்கள். அவர்கள் படித்துக் காண்பித்தார்கள். எதிரி வயக்காட்டிற்கு போகக்கூடாது என்பதற்காக நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.61/2022**
**Prosecution Witnesses :2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கருப்பாயி** | Caste | : |
| Father Name/ Husband Name | : **சக்திவேல்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(24.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தூம்பக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது பக்கத்து வீட்டை சார்ந்தவர் ஆவார். அவர் எனது உறவினர் ஆவார். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிக்கும் எங்களுக்கும் ஏற்கனவே பிரச்சினை இருந்தது. சுமார் 4 வருடங்களுக்கு ஒரு நாள் தேதி மாதம் நினைவு இல்லை. நானும் எனது கணவரும் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்குள் எனது கணவர் இருந்தார். நான் மற்றொரு வீட்டில் சமையல் செய்துகொண்டிருந்தேன். அப்போது நேரம் இரவு 8 மணியிருக்கும். அப்போது சத்தம் கேட்டது. ஆஜர் எதிரிக்கும் எனது கணவருக்கும் சண்டை நடந்து எனது கணவர் கீழே கிடந்தார். அப்போது அருகில் கடப்பாறை இருந்தது. யாரும் எனது கணவர் அருகில் இல்லை. எனது கணவருக்கு கையில் காயம் இருந்தது. எந்த கை என்று நினைவு இல்லை. எனவே நாங்கள் காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தோம். எனது கணவரை சிகிச்சைக்காக திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் சேர்த்தோம். அங்கு

எனது கணவர் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4, 5 வருடமாக நாங்கள் வயக்காட்டில் உழவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவத்தன்று கூலி வேலைக்கு போய்விட்டு வந்து வீட்டில் இருந்தோம். நான் எங்களுடைய மற்றொரு வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தேன். நான் பார்க்கும் போது எனது கணவர் கீழே கிடந்தார். எதிரி அங்கு நின்று கொண்டிருந்தார். எனது வீட்டில் கடப்பாறை இல்லை. அதற்கு முன்பு இருந்தே எதிரி எங்களிடம் பேசாம இருந்தார். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை என்றால் சத்தம் கேட்டு ஓடிவந்தேன். சண்டையை பார்த்தேன். எனது கணவர் கீழே விழுந்து கிடந்தார். அப்போது அருகில் கட்டில் இருந்தது. அப்போது யாரும் விலக்கவரவில்லை. நாங்கள் அங்கு இருந்து நேரடியாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அதன் பிறகு நேரடியாக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வெள்ளைப்பேப்பரில் என்னிடம் ரேகை வாங்கினார்கள். நான் சென்று பார்க்கும்போது இருசக்கர வாகனம் கீழே விழுந்து கிடந்தது. எனது கணவரின் இருசக்கர வாகனம் மழை பெய்து கீழே விழுந்தது என்றாலும் எனது கணவர் கட்டிலில் இருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும் நாங்கள் சிவில் பிரச்சினையை மனதில் வைத்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு கீழே விழுந்ததால் தான் சிறு காயம் ஏற்பட்டது என்றாலும் கடப்பாறையால் அடித்தால் பெரிய காயம் ஏற்படும் என்றால் சரியல்ல. கடப்பாறையை எதிரி கொண்டு சென்றுவிட்டார். அவ்வாறு சம்பவம் நடக்காததால் தான் நாங்கள் இந்த வழக்கில் கடப்பாறையை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.